## மே - 27

**"மனத் தாழ்மையினாலே ஒருவரை ஒருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள்"**

**- பிலி 2 : 3**

எல்லோரும் தாழ்மையின் குணசீலத்தை விருத்திச் செய்ய வேண்டும் என்றும், எல்லா காரியத்திலும் ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யக்கூடாது என்றும், தற்புகழ்ச்சியையும், முதன்மையாயிருக்க போட்டியிடுதலையும், கர்த்தரின் ஆவிக்கும், சபையின் ஆசீர்வாதத்துக்கும் மகா பெரிய சத்துருக்களாக எண்ணி அவைகளை முற்றிலுமாக ஒழித்துவிட வேண்டும் என்றும் பவுல் புத்தி சொல்லுகிறார். அதற்குமாறாக, உடன் சகோதரர்களின் நல்ல சுபாவங்களை கண்டுகொள்ளக் கூடியதும், குறைந்தபட்சம் இவைகளில் சில சுபாவங்களை தன்னுடையதைவிட மேன்மையானதென்று உயர்வாக மதிக்கிறதுமான மனத்தாழ்மையை ஒவ்வொரு வரும் உடையவராக இருக்க வேண்டும். எல்லா சாமர்த்தியத்தையும் எல்லா திறமையையும் எந்த சபையிலும் யாராவது ஒரே ஆளிடம் ஒருபொழுதும் எதிர்பார்க்க முடியாது. ஆகையால், மனத்தாழ்மையுடையவராக இருந்தால், ஒவ்வொருவரும் மற்றவர்களில் தன்னிடத்திலிருப்பதைவிட சிறந்த ஏதோ நல்ல சுபாவங்களையோ அல்லது குணசீலங்களையோ கண்டு கொள்ள முடியும். அப்படியே இவைகளை கண்டு கொள்ளுவதிலும் அந்த சுபாவங்களையுடையவரை கண்ணியப்படுத்துவதிலும் சந்தோஷப்படவேண்டும்.

**- Z ’97, 296 (R 2227).**

மனத்தாழ்மை என்றால், தாழ்மையைக் குறிக்கிறது. தாழ்மை ஒரு தகுதியான சுயமதிப்பு. சுயமதிப்பு நமக்குத் தகுதியாயிருப்பதற்கு மனத்தாழ்மையுடன் கூடியதாக இருக்க வேண்டும். ஏனென்றால் நம்மையே நம்முடைய சரீர சம்பந்தமான, மனது சம்பந்தமான, நீதிநெறி சம்பந்தமான அல்லது மத சம்பந்தமான சுபாவங்களின் நோக்காக சிந்திக்கும் போது அதிகமானதற்குக் கணக்கிடாமல், நிதானித்து அறிய வேண்டும். அப்படிப்பட்ட சுயமதிப்பு இயற்கையாகவே மற்றவர்களை நம்மைவிட அதிக நலமானவர்களாக மதிக்கிறது. ஏனென்றால், அது தன்னுடைய சொந்த சுபாவங்களைவிட அவர்களுடைய சுபாவங்களை அதிக மதிப்புடன் பார்க்கிறது.

**- P '26, 61.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

ரோம 12:3,10,16; 1பேது 5:5; பிலி 2:5-11; சங் 138:6; நீதி 15:33; 16:19; 25:6,7; ஏசா 57:15; ஏரே 45:5; மீகா 6:8; மத் 11:29; 20:26,27; 23:12; லூக் 14:10; யோவா 13:14-16.

**கோபுர வாசிப்பு :** Z ’16, 35 (R 5842)

**வினாக்கள்:** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றின் பலன் என்ன?